மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆலோசனைக் குழு தேவை என்று நான் கருதவில்லை. தோல் தொழில் நடத்துபவர்களுக்கு இப்போது கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அது போக்கப்பட வேண்டும். இப்போது விண்ணமங்கலம் தொழிற் துறைக்கு இயந்திர சாதனங்கள் தேவை. அந்த இயந்திரம்—பெய்லிங் பிரஸ் வேண்டுமென்று கேட்டு டெண்டர் கோரப்பட்டபோது யாரும் அதை சப்ளை செய்ய முன்வரவில்லை. இது சாத்தியமா என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : விண்ணமங்கலத்தில் அரசுத் துறையில் இந்தத் தொழிற்சாலை நடந்து கொண்டிருக்கிறது. இதே மாதிரி மதுரை மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் இத் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆலோசிசிக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விண்ணமங்கலம் வட ஆற்காடு மாவட்டத்தில்தான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் கருத்து பரிசீலிக்கப்படும்.

Road Grants to Panchayat Unions

*688 Q.—Thiru N. Dennis : Will the Honourable the Minister for Local Administration be pleased to state whether there is any proposal under the consideration of the Government to revise the base year of 1967 for determining the length of the Panchayat Union roads for the allotment of Local Roads Grant?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 1—4—1973-ல் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் ஒன்றிய சாலைகளின் நீளத்தையும், 1971-ம் ஆண்டு மக்கள் தொகை கணிப்பின் அடிப்படையிலும் 1974-75-க்கு தலசாலை மானியம் வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. என். டென்னிஸ் : கேள்வி கேட்கப்பட்ட போது, பல்லாண்டுகளாக, 1967-க்கு முன் பஞ்சாயத்து யூனியன் சாலைகள் இருந்த நீளத்தின் அடிப்படையில் லோகல் ரோட்ஸ் கிராண்ட்ஸ் கொடுக்கப்பட்டது. பஞ்சாயத்து யூனியன் சாலைகளைப் பராமரிக்க கஷ்டங்கள் இருந்தன. இப்போது பல ஊராட்சிச் சாலைகளைப் பஞ்சாயத்து யூனியன் சாலைகளாக தரம் பிரித்திருக்கிறார்கள். ஊராட்சி நிதி பற்றாக்குறை இருக்கும் காரணத்தால் ஆண்டுக்கு ஆண்டு பஞ்சாயத்து யூனியன் சாலைகளுக்கு நீளத்தின் அடிப்படையில் லோகல் ரோட்ஸ் கிராண்ட்ஸ் உடனுக்குடன் கொடுக்க அரசு முன்வருமா ?

1975 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 1973-ம் ஆண்டுவரையில் 1961-ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி ஆள் ஒருவருக்கு 18 பைசாவும், சாதாரண ரோடு பராமரிக்கப்பட்ட விகிதாச்சாரத்தில் மைலுக்கு 600 ரூபாய் என்றும் இருந்தது. இப்போது அது 856 ரூபாயாகவும், கடற்கரை அல்லது கழிமுகப் பகுதிச் சாலைக்கு மைலுக்கு 800 ரூபாயாக இருந்தது இப்போது 1,144 ரூபாய் ஆகவும், மலைச்சாலைக்கு மைலுக்கு 1,500 ரூபாயாக இருந்தது இப்போது 2,144 ரூபாயாகவும் மாற்றப்பட்டிருக்கிறது. 1961-சென்ஸஸ்—மக்கள் தொகைக் கணக்கின்படி என்பதை 1971 மக்கள் தொகை என்ற கணக்கின் அடிப்படையில் மாற்றி அதிலும் அதிகமாக ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1974-75-ம் ஆண்டில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அதிக அளவுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆறுமுகம்: மக்கள் தொகை அடிப்படையில் இந்தத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. மக்கள் தொகை அடிப்படை ஒரு கிராமத்தில் 1,500 பேர் இருக்கவேண்டுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதைக் குறைத்து ஆயிரம் பேர் என்று ஆக்கலாம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா? ஒரு மைலுக்கு மேல் இருக்கும் பாதைகளை யூனியன் நிர்வாகம் பராமரிக்க முடியவில்லை. ஆகவே, ஒரு மைலுக்கு அதிகமாக இருக்கும் சாலைகளை ஹைவேஸ் எடுத்துக் கொள்ள அரசு வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இது புதிய ரோடு போடுவது பற்றியல்ல. ரோடுகள் பராமரிப்பது பற்றியது. ஆயிரம் பேர் என்ற கணக்குகள் எல்லாம் இதிலே கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிராமச் சாலைகளை மனத்தில் வைத்து உறுப்பினர் கேள்வி கேட்டிருக்கிறார்.

(முற்பகல் 9·30)

திரு. த. சோலையா: பஞ்சாயத்துக்களின் நிதிநிலைமை சரியாக இல்லாத காரணத்தால் பஞ்சாயத்து ரோடுகளை பஞ்சாயத்துக்களே நிர்வகிக்க முடியாமல் ஆண்டு ஒன்றுக்கு 4, 5, 10 என்ற அளவில் பல ரோடுகளை பஞ்சாயத்து ஒன்றியங்களே பராமரிக்க வேண்டும் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படுகிற தொகை போதுமானதாக இல்லை. ஆகவே, அந்தத் தொகையை இரட்டித்துக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: முன்பிருந்ததை விட, இப்போது ஒரு கோடி ரூபாய்க்கு மேல் அதிகமாகக் கொடுத்திருக்கிறது என்று சொன்னேன். ஊராட்சிகளிலும் பணம் இல்லை. இப்போது மாநில சர்க்கார் இதற்கு அதிகமான அளவில் செலவு செய்ய பணமும் இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: ஸ்தல சாலைகளுக்கான மானியங்கள் 1961-க்குப் பிறகு 1971-ல் தான் ஜனத்தொகை அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு ஸ்தல சாலைகளுக்கு மானியங்கள் வழங்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உறுப்பினர் அவர்கள் சொல்வது புதிய யோசனை. அதைப் பற்றி பிறகு பரிசீலிக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: இப்போது சாலை பராமரிப்பு வேலைகள் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஹைவேஸ் என்ற மூன்று அமைப்புகளினுல் நடைபெறுகிறது. இதில் ஊராட்சிகளிடமிருந்து ஒன்றியங்கள் பாதைகளை எடுத்துக் கொள்ள ஆண்டு ஒன்றுக்கு மிகக் குறைந்த அளவில்தான் எடுத்துக் கொள்கிருர்கள். இதனுல் பல சாலைகளின் பணிகள் எடுக்கப்பட்ட பின்னுல் அவற்றைப் பராமரிக்க முடியாது அந்தப் பாதைகள் சீர்கெட்டுப் போகின்றன. ஆகவே, ஊராட்சிகளால் பராமரிக்கமுடியாத சாலைகளை ஒன்றியங்களோ அல்லது ஹைவேஸோ எடுத்துக் கொள்வது என்ற நடைமுறை கடைப்பிடிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அந்தந்த ஆண்டுக்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்படுகிறதோ அந்த அளவிற்கு ஹைவேஸ், மற்ற ஊராட்சி சாலைகளை எடுத்துக் கொண்டு வருகிருர்கள். அதேபோல் ஒரு ஆண்டு அதிகமாக எடுக்கமுடியாத அளவிற்கு நிதிநிலை இருந்தால் குறைவாக எடுத்துக் கொள்கிருர்கள், நிதிநிலைமை அதிகமாக இருந்தால் அதிகமான அளவிற்கு ரோடுகள் எடுக்கப்படும்.

திரு. என். டென்னிஸ்: அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது பஞ்சாயத்து யூனியன் சாலைகள் மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டு சாதாரண இடங்கள், கடற்கரை, மலைப்பிரதேசங்கள் என்று பிரிக்கப்பட்டு வித்தியாசமான தொகை வழங்கப்படுகிறது என்று சொன்னுர்கள். எனது கேள்வி, பஞ்சாயத்து யூனியன் சாலைகளுக்கு 1—4—1967-க்கு முன்பு நீளத்தின் அடிப்படையில் சாலை மானியம் வழங்கப்பட்டது.

ஆண்டுதோறும் பஞ்சாயத்து யூனியன் சாலைகளை நீளத்தைக் கொண்டு தரம் பிரித்து அதன் அடிப்படையில் இந்த மானியம் வழங்கப்படுமா.? அதில் காலதாமதம் ஏற்படாமல் இருப்பதற் கான வழிவகைகளை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 1—4—1973-ல் இருந்த சாலைகளின் நீளத்தைக் கொண்டு பராமரிப்பதற்கான செலவு 1974-75லிருந்து கொடுத்து வரப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : சில நேரங்களில் இந்த ஒன்றிய ரோடுகளிலும் ஊராட்சி ரோடுகளிலும் பஸ்கள் செல்கிற நேரத்தில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே அந்தச் சாலைகளை பெருவழித்துறையே எடுத்துக் கொள்வதற்கு—எதைச் சொன்னாலும் பொருளாதாரச் சிக்கல் இருக்கிறது இப் போது என்று சொல்வார்கள்—முதல் இடம் கொடுத்து அவற்றைப் பெருவழித்துறை ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முக் கியமான சாலைகளுக்கு முதல் இடம் கொடுக்கப்பட்டு வேலைகள் நடக்கின்றன. பஸ்கள் செல்கிற இடங்கள் அதிகமாகக் கவனிக்கப்படுகின்றன.

திரு. பெ. சீனிவாசன் : திரு. டென்னிஸ் அவர்கள் கேட்ட கேள்விக்கு சரியாக எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. நானும் ஒரு பஞ்சாயத்து யூனியன் சேர்மன். அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது வேறு எங்கேயோ இழுத்துக் கொண்டு போகிறார்கள். உறுப்பினர் அவர்கள் கேட் கேள்வியே வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் ஒன்றும் வேறு எங்கேயோ இழுத்துக் கொண்டு போகவில்லை. கேள்வி கேட்பவர்தான் இழுத்துக் கொண்டு போகிறார்.

Link roads to burial grounds

*689 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to link burial grounds in the State with the village roads; and

(b) if so, the details thereof?